[டாக்டர் ஜெ. ஜெயலலிதா] [1994 மே 3]

1—1—1994 முதல் அகவிலைப்படியை உயர்த்தி அளிப்பதன் காரணமாகவும், மதிப்பூதியம் மற்றும் ஓய்வூதியம் உயர்த்தி வழங்குவதாலும் அரசுக்கு ஆண்டொன்றுக்கு மொத்த மாக 121.37 கோடி ரூபாய் செலவாகும் எனபதையும், இந்த நிதியாண்டில் மட்டும் 141.67 கோடி ரூபாய் செலவாகும் என்பதையும் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன், (மேசையைத் தட்டும் ஒலி)

5. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குழுக்களின் அறிக்கைகளை அளித்தல் பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திரு. மா. சுந்தரதாஸ் பொதுக் கணக்கு குழுவின் தலைவர்

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுக் கணக்குக் குழுவின் சார்பாக குழுவின் நூற்று முப்பத்தொன்றாவது முதல் நூற்று நாற்பத்தி இரண்டாவது வரையிலான 12 அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. கே. முனிவெங்கடப்பன், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

திரு. கே. முனிவெங்கடப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாக குழுவின் நூற்று தொண்ணூற்று இரண்டாவது முதல் இரு நூற்று பத்தொன்பதாவது வரையிலான 28 அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கின்றேன்,

மேற்படி அறிக்கைகளில் 201 முதல் 219 வரையிலான 19 அறிக்கைகள் போதிய அவகாசமின்மையால் அச்சிட்ட பிரதிகளுக்குப் பதிலாக படியெடுத்த பிரதிகள் அளிக்கப்பட்டுள்ளன. இவ்வறிக்கைகளின் பிரதிகள் சட்டமன்ற நூலகத்தில் மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன.

அச்சிட்டப் பிரதிகள் கிடைத்தவுடன், அவை பேரவை உறுப்பினர்களுக்குத் தனியாக அனுப்பி வைக்கப்பெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன் மேலும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது இதயதெய்வம் அவர்களின் ஆட்சி,

பல நல்ல சாதனைகளைச் சாதித்து வருகிறது. அதே சமயத்தில், 1993—94 ஆம் ஆண்டிற்கான, பொது நிறுவனங்களின் குழு, பல சாதனைகளை இந்த ஆண்டு சாதித்திருக்கிறது. தணிக்கைத் துறைத் தலைவரால் அளிக்கப்பெற்ற, வணிக தணிக்கை அறிக்கைகள் அனைத்தும் பரிசீலிக்கப்பட்டு, அவற்றின்மீது குழுவின் அறிக்கைகள் அளிக்கப்பட்டுள்ளன. குழுவின் பரிந்துரைக்காக, தணிக்கை அறிக்கை (வணிகம்) எதுவுமே நிலுவையில் இல்லை என்கிற இந்த நிலை, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை, பொது நிறுவனங்களின் குழுவின் வரலாற்றிலேயே இதுவரையிலும் இல்லாத ஒரு சாதனையாகும். கிடைத்துள்ள தகவலின்படி, வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிலே, வேறு எந்த மாநிலத்திலும் இந்த மாதிரியான நிலை இல்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நண்பகல் 12-00

மேலும், குழு, தன்னாய்வுக்காக நான்கு துறைகளை எடுத்துக் கொண்டு, அந்த நான்கு துறைகளிலே, மூன்று துறைகளையும், சென்ற ஆண்டிலே இருந்த ஒரு துறையையும் எடுத்துக்கொண்டு அறிக்கைகளை அளித்து ஒரு சாதனை படைத்துள்ளது. மேலும், மொத்தமாக 79 அறிக்கைகளை இந்தக் குழு பேரவைக்கு அளித்துள்ளது என்பதையும் தெரிவித்துக் கொண்டு, இந்தக் குழுவை நல்லபடி செயலாற்ற ஆக்கமும், ஊக்கமு அளித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமி பேரவைத் தலைவர் அவர்களுக்கும், இந்தக் குழுவின் சார்பாக என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த ஆண்டு எல்லாக் குழுவினரும் சிறப்பாகப் பணியாற்றி இருக்கிறார்கள், அதற்காக, எல்லாக் குழுவினர்க்கும் என்னுடைய பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இ) அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. எஸ். டேனியல்ராஜ், அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர்,

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின், 1993-94-ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின், 16 முதல் 19 வரையிலான அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்.